**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை

**IA NO.01/2024**

**In**

**O.S No.99/2019**

மோசஸ் **....மனுதாரர்/பிரதிவாதி**

**//எதிர்//**

பாப்பரசன் **.....எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.சண்முகசுந்தரம்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.கந்தசாமி.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கட்டளை 09 விதி 07-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இதன் அசல் வழக்கானது வாதியால் உரிமைவிளம்பல் மற்றும் காலிசுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 17.11.2021-ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றையதினம் மனுதாரருக்கு வயிற்றுவலி ஏற்பட்ட எழுந்து நடக்கக்கூட இயலாமல் படுத்த படுக்கையாக இருந்துவிட்டார். இந்நிலையில் மனுதாரர் மேற்கண்ட 17.11.2021-ல் இந்நீதிமன்றத்தில்

ஆஜராகாததால் மனுதாரரை அழைத்து அவருக்கு எதிராக Exparte உத்தரவு ஏற்பட்டுள்ளது. எனவே மனுதாரர் மீது ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய கோரி இம்மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபணையின் சுருக்கம்** :-

இந்த வழக்கானது கடந்த 2019-ம் வருடத்தில் போடப்பட்டு கடந்த 15.10.2019 அன்று பிரதிவாதி ஆஜராவதற்கு வாய்தா போடப்பட்டு அன்று முதல் 06.11.2019, 20.12.2019, 02.01.2020, 18.02.2020, 27.02.2020, 30.03.2020, 22.04.2020, 06.05.2020 பல வாய்தாக்கள் போடப்பட்டு கடந்த 17.11.2021-ல் வழக்கு மேற்படி நபருக்கு எதிராக Exparte ஆன நிலையில் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக மேற்படி வழக்கில் ஆஜராகாமல் இருந்துவிட்டு வழக்கு தீர்ப்பாகும் சூழ்நிலையில் மேற்படி வழக்கில் ஆஜராகி எந்தஒரு அடிப்படை முகாந்திரமும் இல்லாமல், முறையற்ற காரணத்தின் அடிப்படையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது மோசடியானது என்றும், மேற்படி வழக்கு பிரதிவாதி ஆஜராவதற்கு மேற்படி வாதிக்கு எந்த ஒரு வழக்குரை அதிகாரமும் இருப்பதாக தெரியவில்லை. வழக்குரை அதிகாரம் இல்லாமல் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது தவறு என்றும், இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், மேற்படி எந்த ஒரு முகாந்திரமும் இல்லாமல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மட்டுமே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே மனுதாரரின் இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தனக்கு எதிராக கடந்த 17.11.2021-ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 09 விதி 07 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபணையில் 4 வருடங்களாக வழக்கில் ஆஜராகாமல் தீர்ப்பாகும் நிலையில் எந்தவித அடிப்படை முகாந்திரமின்றி மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும் மனுவை தாக்கல் செய்ய வழக்குரை அதிகாரம் இல்லை என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் வழக்குரை அதிகாரம் இல்லாமல் தாக்கல் செய்துவிட்டு அது கோப்பில் எடுக்கப்பட்டுவிட்ட நிலையில் கடந்த 04.11.2024 தேதியன்று மனுதாரர் தரப்பில் வழக்குரை அதிகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் ஒருதலைபட்ச உத்தரவை

ரத்து செய்ய குறிப்பிட்ட காரணம் போதுமானதா என்று பரிசீலித்து பார்க்கும்போது மனுதாரர் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வாய்தா தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்று கட்சி செய்துள்ளார்.

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 09 விதி 07ன் கீழான மனுக்களில் இலகுவான நடைமுறை பின்பற்ற வேண்டும் என்பதற்கு பல முன்தீர்ப்புகள் உள்ளன.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Pilla Reddy And Ors. vs Thimmaraya Reddy And Ors. on 27 August, 1996 Equivalent citations: (1997) 1 MLJ 37 என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

"11. Under Order 9, Rule 7, C.P.C, the court can permit the petitioners to participate in the proceedings from the date they appear. For the said purpose, they need not show any good or sufficient cause. Even without written statement, they could be permitted to cross-examine witnesses and also adduce evidence. If they are to be permitted to file written statement, then Order 9, Rule 7, C.P.C. contemplates hat they should show good cause. See and . In the later decision, the Supreme Court said that "there is no material difference between the facts to be established for satisfying the two tests of "good cause" and "sufficient cause" There cannot be a "good cause" which is not "sufficient" as affording an explanation for non-appearance, nor conversely a "sufficient cause" which is not a good one and further either of these is not different from "good and sufficient cause" which is used in this context in other statutes. If, on the other hand, there is any difference between the two, if can only be that the requirement of a "good cause' is complied with on a lesser degree of proof than that of "sufficient cause" assuming the applicability of the principle of res judicata to the decisions in the two proceedings, if the Court finds in the proceeding under Order 9, Rule 7 the lighter burden not discharge, it must a fortiori bar the consideration of the same matter in the later proceeding under Order 9, Rule 13 where the standard of proof of that matter is, if anything, higher."

எனவே மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலித்து பார்க்கும்போது மனுதாரரால் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இருப்பினும் மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தை கருத்திற்கொண்டு இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு ரூ.500/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**//உண்மை நகல்//**

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 01/2024**
**O.S.No. 99/2019**
**நாள். 21.01.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**